நமது 'முதல்வரின் காலை உணவுத் திட்டம்' வெளிநாடுகளிலும் பரவுகிறது! முதலில் கனடா நாட்டிலும், இப்போது

# இங்கிலாந்து நாட்டிலும் தொடங்குகிறது!

## பள்ளிகளில் ஏப்ரலில் அமலாகிறது!



லண்டன், பிப். 25 -

**நமது முதல்வரின் காலை உணவுத் திட்டம் வெளிநாடுகளிலும் பரவுகிறது! முதலில் கனடா நாட்டிலும், இப்போது இங்கிலாந்து நாட்டிலும் தொடங்குகிறது.**

மாணவ, மாணவிகள் பசியுடன் பள்ளிக்கு வருவதை தடுக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட காலை உணவுத் திட்டம் இந்தியா மட்டுமின்றி உலகெங்கும் பிரபல மடைந்துள்ளது. வரும் ஏப்ரல் மாதம் முதல் இங்கிலாந்து நாட்டிலும் காலை உணவுத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கும் திட்டம் கடந்த 2022ம் ஆண்டு செப்டம்பர் 15ம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

**உலக நாடுகளுக்கே வழிகாட்டி!**

இதனைத் தொடர்ந்து அரசு உதவிப் பெறும் பள்ளிகளிலும் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டது. இத்திட்டம் மூலம் சுமார் 2 ஆயிரம் பள்ளிகளில் படிக்கும் லட்சக்கணக்கான மாணவ, மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டைப் பின்பற்றி இத்திட்டத்தை தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களும் செயல்படுத்தி வருகின்றன. இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலக நாடுகளுக்கே 'திராவிட மாடல்' அரசு வழிகாட்டுகிறது.. தமிழ்நாட்டின் காலை உணவுத்திட்டத்தை கனடா அரசு , தங்களது நாட்டில் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தை இங்கிலாந்து அரசும் செயல்படுத்த உள்ளது. வருகின்ற ஏப்ரல் மாதம் முதல் பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என இங்கிலாந்து அரசு அறிவித்துள்ளது. முதற்கட்டமாக 750 பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக அந்நாட்டின் பெண்கள் மற்றும் சமத்துவத்திற்கான அமைச்சர் பிரிட்ஜெட் பிலிப்சென் தெரிவித்துள்ளார். காலையில் பள்ளி குழந்தைகளுக்கு கோதுமை கஞ்சி, பழங்கள், தயிர் என ஆரோக்கியமான சத்தான காலை உணவுகள் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தால் 18 லட்சம் குழந்தைகள் பயனடைவர்கள் என்று இங்கிலாந்து அமைச்சர் கூறியுள்ளார்.

காலை சிற்றுண்டி திட்டம் மூலம், மாணவர்களின் கற்றல் திறன் மேம்படும் என்றும், பல்வேறு போட்டிகளில் அவர்களும் திறம்பட கலந்துகொள்ள முடியும் என்றும் இங்கிலாந்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.



சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று (24.2.2025). தமிழ்நாடு முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்கள் திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக செல்லும் வழியில், கோட்டூர்புரத்தைச் சேர்ந்த அய்யப்பன் என்பவரின் நான்காம் வகுப்பு பயிலும் மகன் கபிலன், தமிழ்நாடு அரசு மும்மொழிக் கொள்கை எதிர்த்து வருவதால் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிதியை நிறுத்தி வைத்துள்ளதால், தான் உண்டியலில் சேமித்து வைத்த 1,500 ரூபாயை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினான்.

பொள்ளாச்சி ரெயில் நிலையத்தில்

# இந்தி எழுத்தை தார்பூசி அழித்து தி.மு.க.வினர் போராட்டம்!

## மும்மொழிக் கொள்கைக்கு எதிர்ப்பு வலுக்கிறது!

பொள்ளாச்சி, பிப். 24 -

ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கைக்கு தமிழகம் முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பி வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் பொள்ளாச்சி ரெயில் நிலைய பலகையில் இருந்த இந்தி எழுத்தை தி.மு.க. வினர் தார்பூசி அழித்தனர்.

மும்மொழிக் கொள்கையை தமிழ்நாட்டில் மல்படுத்த ஒன்றிய அரசு கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் இருமொழிக் கொள்கையே தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திட்டவட்டமாக கூறிவிட்டார்.

இந்நிலையில் மும்மொழிக் கொள்கையை திணிப்பதில் மத்திய அரசு முழுமையாக ஈடுபட்டு வருவதை எதிர்த்து பல்வேறு போராட்டங்கள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டு வருகிறது.

சென்னையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் கண்டன பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. இதில் கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்.

மேலும் தமிழ்நாட்டில் முழுவதும் வீடுகளுக்கு முன் இந்தி எதிர்ப்பு வாசகம் மற்றும் ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கைக்கு எதிராக கோலமிட்டு பெண்கள் தங்கள் எதிர்ப்பை காட்டி வருகின்றனர். நாளுக்கு நாள் இந்த விவகாரம் விஸ்வ ரூபம் எடுத்து வருகிறது.

இந்நிலையில் கோவை மாவட்டம், பொள்ளாச்சி ரெயில் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பெயர் பலகையில் இந்தி எழுத்தை தி.மு.க.வினர் தார்பூசி அழித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் தி.மு.க. சட்டத் திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், நகர்மன்ற உறுப்பினர் செந்தில்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணி மாறன் தென்றல், முன்னாள் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் அவினாஷ் கார்த்திக், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பைக் பாபு, ஸ்ரீரங்கன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

ஒன்றிய அரசின் இந்தி திணிப்புக்கு எதிராகவும், மும்மொழிக் கொள்கைக்கு எதிராகவும் முழக்கமிட்டனர்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகராட்சி, 16, 20, 27 ஆகிய வார்டுகளில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து தர வேண்டும் எனவும், சிறிய உயர் கோபுர மின்விளக்கு அமைத்து தர வேண்டும் எனவும், தார் சாலை அமைத்து தர வேண்டும் எனவும் அப்பகுதி பொதுமக்கள் சார்பில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்த கோரிக்கையை ஏற்று ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் மூன்று இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், ரூபாய் 23 லட்சம் மதிப்பீட்டில் 16வது வார்டு பகுதியில் புதிய தார் சாலை, 27 வார்டில் சிறிய உயர் கோபுர மின்விளக்கு அமைக்கப்பட்டது. இதனை மக்கள் பயன்பாட்டிற்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், சிறிய உயர் கோபுர மின்விளக்கு, தார் சாலை ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி செயலாளர் E.S.பெர்னாட் , மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அரசு அதிகாரிகள், பொதுநலச்சங்க நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.

கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியத்தில்

## கழகத் தலைவர் பிறந்த நாள் - மாலை நேர கருத்தரங்கம்!

சி.கோபி தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

வேலூர், பிப். 25-

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் கெம்மங்குப்பம் கிராமத்தில், முரசொலி தமிழ் மன்றம் (ம) கிளை கழகங்களின் சார்பில், கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, மாலை நேர கருத்தரங்கம் நடைபெற்றது.

மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணை செயலாளரும், முரசொலி தமிழ் மன்ற நிறுவனர் கே.வி. குப்பம் சி.கோபி தலைமை தாங்கிட ஒன்றிய கழக செயலாளர் கே. சீதாராமன், கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் இரா. முருகேசன், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள் கே.தயாள மூர்த்தி, விடி.சிவக்குமார், தலைமைக் கழக பேச்சாளர்களான, வழக்கறிஞர் செல்வி வான்மதி, பாடகர் எஸ் மணி, பழ இராசேந்திர பிரசாத், மாவட்ட மருத்துவரணி தலைவர் டாக்டர் தி.அ.முகமது சயீ, ஆகியோர் கருத்துரை வழங்கினர். கிளையின் செயலாளர் சி. இரமேஷ் வரவேற்றார்.

ஒன்றிய துணை செயலாளர் ஏழ்மைநாதன், மாவட்ட பிரதிநிதிகள், கோ. இளங்கோ, கே.குப்பன், சி.மார்க்கபந்து, மாவட்ட மருத்துவரணி துணை அமைப்பாளர் மரு.கோவி.தூயவன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எஸ். மோகன், தொழில் அணியைச் சேர்ந்த இரா.முரளி, கா.சுரேஷ் ஆசிரியர் இரவிச்சந்திரன், வி.எத்திராசன், பனிமனை சி. மதியழகன், சேத்துவண்டை இரா.சத்தியா , எஸ்.டி. இரகு. மாணவரணி கரு.சிரிதர், இளைஞரணி ஆர் ராஜூவ்காந்தி, எஸ்.என்.சாமுவேல், சே. வண்டை.திருஞானம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கழக காலண்டர்கள் வழங்கப்பட்டன. கோவி.அழகிரி நன்றி கூறினார்.

சமூகத் தணிக்கையினை முறையாக நடத்துவதிலும் – குறைகள் கண்டறிவதிலும்

# தேசிய அளவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி அறிவிப்பு!

சென்னை, பிப்.25-

சமூகத் தணிக்கையினை முறையாக நடத்துவதிலும் - குறைகள் கண்டறிவதிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் அறிவிக்கையின் படி தமிழ்நாடு அரசு ஒரு தற்சார்பற்ற சமூக தணிக்கைச் சங்கத்தினை தோற்றுவித்து 2012-2013 ஆம் ஆண்டு முதல் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. இச்சங்கத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும், பயிற்சி பெற்ற மாவட்ட /வட்டார / கிராம வள பயிற்றுநர்கள் சமூக தணிக்கை நடத்துவர். சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளே மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது ஆகும்.

சமூக தணிக்கையினை முறையாக நடத்துவதிலும், குறைகள் கண்டறிவதிலும், முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதிலும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுவதால், தேசிய அளவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

கிராம ஊராட்சிகளில் ஒவ்வொரு ஆண்டும் சமூக தணிக்கைகள் முடிந்த வுடன், தயார் செய்யப்பட்ட சமூக தணிக்கை அறிக்கைகள்



சிறப்பு கிராம சபைகளில் பொது மக்கள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. இவை அனைத்தும் முதற்கட்ட நடவடிக்கைகள் ஆகும். பின்னர் இப்பத்திகள் ஒவ்வொன்றின் மீதும் மாவட்ட அளவில் ஆய்வு செய்யப்படும். அனைத்து சமூக தணிக்கை பத்திகளையும் ஏற்புடைய பத்திகள் மற்றும் ஏற்க இயலாத பத்திகள் என பிரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் உயர் மட்டக் குழுவில் முடிவு செய்யப்பட்டு, வசூல் செய்யப்பட வேண்டிய தொகை இறுதி செய்யப்படும்.

பின்னர் அத்தொகை சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்டு உரிய அரசு தலைப்பில் செலுத்தப்படும்.

சமூக தணிக்கை ஆரம்பிக்கப்பட்ட 2012-13ம் ஆண்டு முதல் 2023-24 ஆம் ஆண்டு வரை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளின் சமூக தணிக்கை அறிக்கைகளின் படி மொத்தம் ரூ.291.46 கோடி நிதி இழப்பீடு எனத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மாவட்ட அளவில் இது குறித்து ஆய்வு செய்யப்பட்டும். ஏற்புடைய பத்திகள் கண்டறியப்பட்டும். மாவட்ட ஆட்சித்தலைவர்களால் உயர்மட்டக்குழுவில் வசூல் செய்யப்பட வேண்டிய தொகை ரூ.105.35 கோடி என முடிவு செய்யப்பட்டது. பின்னர் அரசின் தீவிர முயற்சியின் மூலம் இதில் ரூ.98.26 கோடி தொகை வசூல் செய்யப்பட்டு அதாவது 93 சதவிகிதம் அரசின் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2024-25ஆம் ஆண்டிலும், சமூக தணிக்கை நடைபெற்று, 79,122 குறை பத்திகள் என இது வரை அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. இதில் 30.198 பத்திகள் நிதி இழப்பீடு பத்திகள் எனவும், அதற்கான தொகை ரூ.14.07 கோடி எனவும், மீதமுள்ள 48,924 பத்திகள் நிதி இழப்பீடு இல்லாத சாதாரண பத்திகள் எனவும் அறிக்கை பெறப்பட்டது.

இப்பத்திகள் மாவட்ட அளவில் ஆய்வு செய்யப்பட்டும், ஏற்புடைய பத்திகள் மற்றும் ஏற்க இயலாத பத்திகள் என பிரிக்கப்பட்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்களால் உயர்மட்டக் குழுவில் 6,437 பத்திகள் மற்றும் ரூ.204 கோடி நிதி இழப்பீடு என முதற்கட்டமாக முடிவு செய்யப்பட்டது. மேலும் இதில் வசூல் செய்யப்பட வேண்டிய பத்திகளாக 6215 பத்திகளும் நிதி இழப்பீடு தொகையாக இதுவரை ரூ.1.94 கோடி என இறுதி செய்யப்பட்டுள்ளது. மீதத் தொகை குறித்து உயர்மட்டக்குழுக் கூட்டம் மூலம் முடிவு செய்யப்பட சீரிய முயற்சிகள் நடைபெற்று வருகிறது. இது மாநில அளவில் கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

மேற்படி நிதி இழப்பீடு தொகை ரூ.194 கோடியில் சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து ரூ.193 கோடி வசூல் செய்யப்பட்டு அரசின் தலைப்பில் கட்டப்பட்டு உள்ளது. இதன் தொடர்ச்சியாக, மேற்படி முறைகேட்டிற்கு காரணமானவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீதமுள்ள பத்திகளின் மீதும் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் உயர்மட்டக்குழு கூட்டம் நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வனைத்து பணிகளும் இந்நிதியாண்டிற்குள் முடிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு -அமைச்சர் இ.பெரியசாமி குறிப்பிட் டுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தே. பொன்னுசாமி

பிப்ரவரி 25 (1986)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.

திருச்சி மாவட்டம் முசிறி ஒன்றியக் கழகச் செயலாளர் பொதுக்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

முசிறி வட்டம், விவசாய கூட்டுறவு வங்கி தலைவராகவும், குணசீலம் ஊராட்சித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

ஏ.எம்.வி. பிரபாகரராஜா - க.தனசேகரன் - கே.கண்ணன் பங்கேற்பு

# 137 ஆ வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் அ.கதிரேசன் அறிக்கை

சென்னை, பிப். 25 -

முதல்வர் அவர்களின் பிறந்த நாளை யொட்டி 137 ஆ வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இது குறித்து வட்டச் செயலாளர் அ.கதிரேசன் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் ஆலோசனைப்படி

கலைஞர் நகர் தெற்கு பகுதி 137 ஆ வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக்

கூட்டம் இன்று (25.2.2025 - செவ்வாய் ) இரவு 7 மணிக்கு அண்ணா மெயின் ரோடு கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக அலுவலகத்தில் வட்ட அவைத் தலைவர் என்.சக்கரவர்த்தி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகராஜா, சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கை குழு தலைவர் க.தனசேகரன், கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் கே.கண்ணன் ஆகியோர் கலந்து

கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

பொருள் : திராவிடர் மடல் முதல்வர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா

இக்கூட்டத்திற்கு 137 ஆ வட்டக் கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள். பகுதி கழக நிர்வாகி கள். வட்டக் கழக நிர்வாகிக.ள் அனைவரும்

தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 137வது ஆ வட்ட கழக செயலாளர் அ.கதிரேசன் அறிவித்துள்ளார்.

நே.சிற்றரசு தலைமை! சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை ஆலோசனைக் கூட்டம்!

## அமைப்பாளர் திருமலை பொன்னுரங்கம் அறிக்கை!

சென்னை, பிப். 25-

சென்னை மேற்கு மாவட்டக் கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் திருமலை பொன்னுரங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னைமேற்குமாவட்ட கலைஇலக்கியப்பகுத்தறிவுப் பேரவை ஆலோசனைக் கூட்டம் இன்று (25.2.2025) மாலை 6 மணி அளவில் என் 20/32 காம்தார் நகர் முதல் தெருவில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில்நா.எழிலன்எம்.எல்.ஏ. எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில்சென்னை மேற்கு மாவட்ட கலை இலக்கியபேரவைநிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழகத்தலைவர் முதல்வர் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு திருமலை பொன்னுரங்கம் எம்.சி. தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்கள் மக்களுக்கு மருந்துகள் குறைந்த விலையில் கிடைக்க செய்யும் வகையில் "முதல்வர் மருந்தகம் என்ற புதிய திட்டம் மூலம் முதற்கட்டமாக தமிழ்நாடு முழுவதும் 1000 மருந்தகங்களை திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து,தருமபுரி நகராட்சி குமாரசாமிபேட்டை முதல்வர் மருந்தகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி ஆகியோர் முதல்வர் மருந்தகத்தினை பார்வையிட்டு, முதல்வர் மருந்தகத்தின் மூலம் 5 பொது மக்களுக்கு மருந்துகள் வழங்கி,விற்பனையை தொடங்கி வைத்தனர்.விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி,வெங்கடேஸ்வரன், நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது,கழக நகர செயலாளர் நாட்டான்.மாது,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம்.பெ.சுப்ரமணி,ஒன்றிய செயலாளர் டி.எல்.காவேரி,நகர பிரதிநிதிகள்,மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.